பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆவணி 12 (27—8—68) செவ்வாய் ★ வெளியூர்: ஆவணி 13 (28—8—68) புதன் [இதழ்: 62

வருவாய் அடிப்படையில் சமுதாய மண்டபங்கள்

நகராட்சிகள் கட்டிக்கொள்ள அனுமதி

★

திருச்சி, ஆக. 27—

சமுதாய மண்டபங்கள்மூலம் வருவாய் கிடைப்பதாக இருக்குமானால், அவற்றைத் தங்கள் சொந்த நிதியிலிருந்து கட்டிக்கொள்ளலாம் என்று தமிழகத்திலுள்ள நகராட்சிகளுக்கு மாநில அரசு அனுமதி வழங்கியிருக்கிறது.

இறக்குமதி லைசென்சு ஊழல்

தகவல் தருவதில் தயக்கமேன்?

நாடாளுமன்ற மேலவையில் கடும் கண்டனம்

புதுடில்லி, ஆக. 26—

"இறக்குமதி லைசென்சுகளை, கம்பெனிகள் தவருகப் பயன்படுத்துவது பற்றி உடனுக்குடன் தகவல் தருவதில்லை"

என்று நாடாளுமன்ற மேலவையில், வர்த்தக அமைச்சரை சில உறுப்பினர்கள் கடுமையாகக் குறைகூறினர்.

இதன் தொடர்பாகத் துணைக் கேள்விகளைக் கேட்ட சந்திரசேகர் காங்), 'இறக்குமதியாளர்கள், பெரிய தொழிலதிபர்கள் ஆகியோரின் தவருன செயல்கள் பற்றிக் கேள்வி கேட்டால், இலாகாக்களில் 'பைல்'கள் காணப்படவில்லை என்றும், அமைச்சர்கள் ஒன்றும் செய்ய இயலாதவர்களாயிருக்கிருர்கள் என்றும் கூறப்படுகின்றன; 'அவையில் இரண்டு உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டால், மூன்று நாட்களுக்குள் அவசியமான தகவலைப் பெற முடியும்' என்ருர் அவர்.

"அரசு தன்னுடைய வீட்டு வேலையைச் சரிவரச் செய்வதில்லை என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு" என்று ஏ. சி. குல்கர்னி கூறினர்.

"சென்ற ஐந்து ஆண்டுகளில் இறக்குமதி லைசென்சு தவருகப் பயன்படுத்தப்பட்டதாக எந்தெந்தக் கம்பெனிகள்மீது புகார்கள் வந்திருக்கின்றன? இது பற்றி அரசு நடத்திய விசாரணைகளின் முடிவு என்ன?"

என்று ஆர். பி. கைத்தான் கேட்டார்.

"தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன; நாளடைவில் அவையில் தாக்கல் செய்யப்படும்" என்று வர்த்தக துணை அமைச்சர் முகம்மது ஷ்பி குரேஷி பதில் அளித்தார்.

இந்தப் பதிலைத் தொடர்ந்துதான் உறுப்பினர்கள், வர்த்தக அமைச்சரைக் குறை கூறினர்.

"ஐந்து ஆண்டுகளுக்கு வேண்டிய தகவல் சேகரிக்கப்பட வேண்டியிருப்பதால், அதற்கு அவகாசம் தேவை; வர்த்தக அமைச்சகம், தலைமை இறக்குமதி--ஏற்றுமதி கண்ட்ரோலர், ஆகிய பல்வேறு அதிகாரிகளிடமிருந்தும், பாங்கிகளிடமிருந்தும் தகவல் சேகரிக்க வேண்டியிருக்கிறது" என்று குரேஷி தெரிவித்தார்.

'தீன் மூர்த்தி' இல்லம்

மத்திய அமைச்சசவை முடிவு

புதுடில்லி, ஆக. 26—

"'தீன் மூர்த்தி' இல்லத்தைத் தலைமையமைச்சர் குடியிருப்பதற்காக ஒதுக்குவது என்று அமைச்சரவை முடிவு செய்துவிட்டது"

என்று வீட்டு வசதித் துறை துணையமைச்சர், மக்களவையில் தெரிவித்திருக்கிருர்.

மத்திய நிதியமைச்சுத் துறையின் திறமையின்மை

ஊதாரிச் செலவுகளைத் தவிர்க்க முடியவில்லை

மக்களவையில் சுதந்தரா உறுப்பினர் கண்டனம்

புதுடில்லி, ஆக. 26—

மத்திய அரசின் ஊதாரித்தனமான செலவுகளை மக்களவையில் உறுப்பினர்கள் பலரும் பலமாகக் கண்டித்தனர்.

துணை மானியக் கோரிக்கைக்காகக் கொண்டுவரப்பட்ட மசோதாமீது பேசிய சுதந்தராக் கட்சி உறுப்பினர் லோபோ பிரபு, வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு மூன்று மாதமே முடிந்திருக்கும் இந்த நேரத்தில், இப்படித் துணை மானியக் கோரிக்கை எழுப்புவது நிதி அமைச்சுத்துறை முழு அளவில் சீர்குலைந்திருப்பதையும் ஊதாரிச் செலவுகளைக் கட்டுப்படுத்த முடியாத அதன் திறமையின்மையையும்தான் காட்டுகிறது என்று கூறிக் கண்டித்தார்.

ரூ. 68.78 கோடி வருமான வரியை வசூலிக்க இயலாதாம்!

புதுடில்லி, ஆக. 26—

"1967 டிசம்பர் 31-ம் நாள்வரை மொத்தம் ரூ. 411.25 கோடி வருமான வரி வரவேண்டியிருந்ததில், ரூ. 68.78 கோடியை வசூல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது"

என்ற தகவலை நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய், மக்களவையில் வெளியிட்டார்.

குறைக்கப்பட்டுவிட்டதாம்!

1967 ஏப்ரல் முதல் நாளன்று வசூலிக்கவேண்டிய வருமான வரி ரூ. 541.71 கோடியாகும் என்றும், இதில் 1968 மார்ச் 31-ம் நாள்வரை ரூ 47.04 கோடி வசூலிக்கப்பட்டோ அல்லது அட்பீல் செய்யப்பட்டதன்பேரில் குறைக்கப்பட்டோவிட்டது என்றும் அவர் கூறினர்.

ரூ. 25.14 கோடிக்கான அப்பீல் மனுக்கள் விசாரணையின் காரணமாக இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

சாட்சியம் கிடைக்கவில்லையாம்!

மற்ருெரு கேள்விக்கு அவர், 'ஏர் இந்தியா'வின் உயர்தர அதிகாரி ஒருவர், சுங்கம், மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டங்களை மீறினரா என்பது குறித்து நடத்தப்பட்ட விசாரணையில், 'அவர் தவறு செய்தார்' என்பதற்கான சாட்சியங்கள் எதுவும் கிடைக்கவில்லை என்று பதிலளித்தார்.

மாநில அரசுகள் வாங்கிய கடன் உயர்ந்துவிட்டதாம்!

மத்திய அரசிடமிருந்து வாங்கிய கடன்கள் உட்பட மாநில அரசுகளுக்கு மொத்தம் 1963—64-ம் ஆண்டு முடிவில் ரூ. 4,082 கோடி கடன் இருந்ததாகவும், இது 1967—68-ம் ஆண்டு முடிவில் ரூ. 6,666 கோடிக்கு வளர்ந்துவிட்டதாகவும் துணை நிதியமைச்சர், கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்திருக்கிருர்.

மாநில அரசு ஊழியர்கள் பஞ்சப்படி உயர்வுக்கு உதவுக!

மக்களவையில் கந்தப்பன் வற்புறுத்தல்

புதுடில்லி, ஆக. 26—

நாடாளுமன்ற மக்களவையில், துணை மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்ட கழக உறுப்பினர் செ. கந்தப்பன் அவர்கள்,

"மாநில அரசு ஊழியர்கட்குப் பஞ்சப்படியை உயர்த்திக் கோடுக்க, நிதி ஒதுக்குவது மத்திய அரசின் நீங்காக் கடமையாகும்" என வற்புறுத்தினுர்.

அவர் மேலும் பேசுகையில், ஒழுக்க நெறியினையும் மன உறுதியையும் பரப்பும் இராமகிருஷ்ண அற நிலையத்திற்கு ஒதுக்கியிருக்கும் நிதி போதாது என்றும், ஒய். எம். சி. ஏ. போன்ற அமைப்புகளுக்கும் இதுபோன்ற நிதியுதவி செய்யவேண்டும் என்றும் கூறினுர்.

அனைத்திந்திய வானொலியில், மலாய், சிங்களம் ஆகிய மொழிகளிலும் நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

எண்ணெய் நிறுவனத்தில் ஊழல்!

புதுடில்லி, ஆக. 26—

அரசுக்குச் சொந்தமான இந்திய எண்ணெய் நிறுவனம், பீப்பாய்கள் வாங்கியது சம்பந்தமாக குறிப்பிட்ட ஒரு கம்பெனிக்குச் சலுகை காட்டியிருப்பதாகப் பல உறுப்பினர்களும் மக்களவையில் குறை கூறினர்.

இந்தப் பேரத்தில் ரூ. 3.5 இலட்சம் இழப்பு ஏற்பட்டிருப்பதாக உறுப்பினர் ஒருவர் கூறினுர்.

"தரம் குறைந்த பீப்பாய்களை விற்ற இந்நிறுவனத்தின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?" என்றும் அவர் வினவினுர்.

மேலும் இரு நீதிபதிகள்

தமிழக உயர் நீதிமன்றத்திற்கு நியமனம்

சென்னை, ஆக. 27—

"தமிழக உயர் நீதிமன்றத்திற்கு மேலும் இரு நீதிபதிகளை நியமனம் செய்வதற்கு மாநில அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது"

என்று சட்டமன்ற மேலவையில் சட்டத் துறை அமைச்சர் செ. மாதவன் தெரிவித்தார்.

"இந்த ஆண்டில் ஜூலை 1-ம் நாள் வரையில் 2,356 'ரிட்' மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன; இவற்றில் 1,845 மனுக்கள் விசாரணை முடிவுருமல் இருக்கின்றன"

என்று கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்தார்.

1967-ம் ஆண்டில் 4,015 'ரிட்' மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததில் 2,295 மனுக்கள் விசாரித்து முடிக்கப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

"1966 டிசம்பர் 31-ம் நாள் வரையில் 5,280 மனுக்கள் விசாரணை முடிவுருமல் இருந்தன" என்றும் அவர் கூறினுர்.

சென்னை எண்ணெய் ஆலை

அடுத்த ஆண்டு இயங்கும்

புதுடில்லி, ஆக. 27—

"சென்னை எண்ணெய் துப்புரவுத் தொழிற்சாலை அடுத்த ஆண்டு முற்பகுதியில் இயங்கத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது"

என்று மக்களவையில் தகவல் தரப்பட்டது.

குசராத் சட்டமன்றத்தில்......

தமிழகத்துக்குப் பாராட்டு

ஆமதாபாத், ஆக. 26—

குசராத் சட்டமன்றத்தில், தமிழக அரசின் கிராம மின்சாரத் திட்டத்தை எடுத்துக்காட்டி, அனைத்துத் தரப்பு உறுப்பினர்களும் மிகவும் பாராட்டினர்.

"சீரான கிராமிய மின்சாரத் திட்டத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டு, தமிழகம்தான்"

என்று காங்கிரசு உறுப்பினர்களும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும், மின்சாரக் கழக வரவு--செலவுத் திட்ட விவாதத்தின்போது பேசுகையில் குறிப்பிட்டனர்.

சொந்தக் காரியத்துக்கு அமைச்சரை அணுகாதீர்!

நகராட்சி ஊழியர்கட்கு அறிவுறுத்தல்

திருச்சி, ஆக. 26—

"உத்தியோக இடமாற்றம், ஓய்வு கால வயது வரம்பைத் தளர்த்துதல் போன்ற தங்கள் சொந்த நலன்களுக்காக அரசியல் அல்லது வேறுவகையான செல்வாக்கின்மூலம் அமைச்சர்களை நிர்ப்பந்தப்படுத்த முயலும் தமிழக நகராட்சி ஊழியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்"

என்று மாநில அரசு எச்சரித்திருக்கிறது.

நகராட்சி மன்ற ஊழியர்களுக்குக் குறைகள் இருக்குமானுல், அவற்றை, தங்களுடைய மேலதிகாரிகள் மூலமாக சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கலாம்.

மிகு விரைவு இரயில் வண்டி

சென்னை -- கோவை வழியில் ஓடும்

புதுடில்லி, ஆக. 27

"சென்னை—கோவை இடையே மிகு விரைவு இரயில் வண்டி விடுவதற்கான வாய்ப்பு வசதிகள் பற்றி ஆராயப்பட்டு வரு—கிறது"

என்று மக்களவையில், இரயில்வே அமைச்சர் தெரிவித்தார்.

"இந்த இரயில் இப்பொழுது இவ்வழிகளில் ஓடிக்கொண்டிருக்கும் எல்லா இரயில்களையும்விட அதிகமான வேகத்தை உடையதாக இருக்கும்" என்றும் அவர் தெரிவித்தார்.

பூம்புகார் எங்கே?

காங்கிரசு உறுப்பினருக்கு ஏற்பட்ட ஐயம்!

சென்னை, ஆக. 25—

"இலக்கியச் சிறப்புப் பெற்ற பூம்புகார் நகரத்தைப் பண்டையச் சிறப்புக்களை எடுத்துக்காட்டும்வகையில் உல்லாசப் பயணிகள் பார்ப்பதற்குரிய இடமாக மாற்றியமைக்க உத்தேசம் உண்டா?"

என்று சட்டமன்றத்தில் எஸ். கணேசன் கேட்டார்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து:— "அவ்வித உத்தேசம் இல்லை."

கேள்வி:—"அங்கு பயணிகள் விடுதி கட்டப்படுமா?"

அமைச்சர்:—"பயணிகள் அதிகமாக வந்தால், அதுபற்றி ஆலோசிக்கப்படும்."

கே. விநாயகம்:—"பண்டையப் பூம்புகார் கடலில் மூழ்கிவிட்டதே --- புதிய பூம்புகார் யாரால் கட்டப்படுகிறது?"

அமைச்சர்:—"இப்போது காவிரிப்பூம்பட்டினமுள்ள இடத்தில்தான் பண்டையப் பூம்புகார் இருந்ததாகக் கல்வெட்டுகள், சரித்திரச் சான்றுகள் கிடைத்துள்ளன."

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்:—"பழைய பூம்புகாரின் ஒரு பகுதியே இப்போது உள்ள பாழடைந்த காவிரிப்பூம்பட்டினம். அதைப் புதுப்பிக்கவே அரசு ஏற்பாடு செய்கிறது."

ம. பொ. சிவஞானம்:—"காவிரிப்பூம்பட்டினத்தைத்தான் கடல் விழுங்கியது; 'புகார்' என்பது காவிரிக் கடலில் கலக்கும் இடம்தான்; அது இனியும் உள்ளது."

பணவிடைத் தாள் மூலம் ஓய்வூதியம்

சென்னை, ஆக. 26—

"ஓய்வு பெற்ற ஆசிரியர்கட்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தைப் பண விடைத் தாள் மூலம் அனுப்பிவைக்கும்படி ஆசிரியர்கள் தரப்பிலிருந்து கோரிக்கை வந்தால் அதுபற்றிக் கவனித்து ஆவன செய்யப்படும்"

என்று சட்டமன்றத்தில், கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கழக உறுப்பினர் மலைச்சாமியின் கேள்விக்குப் பதிலளித்தார்.

ஆக்கிரமிப்பைக் கண்டிக்க அஞ்சுவதேன்?

வலிமையைக் கண்டு வளைந்து கொடுக்க வேண்டாம்

இந்திய வெளிநாட்டுக் கொள்கை தோல்வி-- மக்கள் சபையில் கிருஷ்ணமூர்த்தி இடித்துரை

புதுடில்லி, ஆக. 25

"ஒரு நாட்டின் பலம் அதன் இராணுவத் தளவாடங்களிலோ, வெடி மருந்திலோ, அணுகுண்டுகளிலோ இல்லை; அதன் தர்மத்திலும், நேர்மையானதும் — உறுதிமிக்கதுமான கொள்கைகளிலும்தான் இருக்கிறது.

"இந்தியா இதுவரை கடைபிடித்துவந்த தர்மத்தைக் கைவிட்டுவிட்டது; நமது தலைமையமைச்சரும் மற்ற காங்கிரசு நண்பர்களுமே நமது நாடு தர்மத்தைக் கைவிட நேர்ந்ததற்குக் காரணமாவார்கள்.

"வலிமையே நியாயமாகும் என்பது என்றைக்குமே சரியல்ல; வலிமையைக் கண்டு அஞ்சி நாம் வளைந்து கொடுக்கக் கூடாது"

என்று மக்களவையில், கழக உறுப்பினர் வெ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், செக்கோஸ்லோவேகியாவை இரஷ்யப் படைகள் ஆக்கிரமித்தது குறித்துக் கொண்டுவரப்பட்ட கண்டனத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் கேட்டுக்கொண்டார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"நமது நாடு தனக்கென்று ஒரு தனிச் சிறப்புவாய்ந்த மரபையும், பண்பாட்டையும் கொண்டதாகும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

நமது நாட்டுக்கென்றே நீண்ட நெடுங்காலமாக ஒரு தர்மம் இருந்துவந்துள்ளது. அந்தத் தர்மத்தில் உறுதியான நம்பிக்கையினையும் நமது நாடு வைத்திருக்கிறது.

சுதந்தரமாக வாழும் ஒரு நாட்டின்மீது வன்மை பொருந்திய ஒரு நாடு படையெடுத்து அந்த நாடு முழுவதையும் ஆக்கிரமித்துவிட்டிருக்கின்ற நிலையில் நமது தலைமையமைச்சர் இந்தச் செயலை ஆக்கிரமிப்பு என்று தெளிவாக அறிவிக்கத் தயங்குகிறார்; இரஷ்யாவின் செயலைக் கண்டிப்பதற்கு அவருக்குத் துணிவில்லை.

இந்திய அரசின் வெளிநாட்டுக் கொள்கை தோல்வியடைந்துவிட்டது என்பதையே இது காட்டுகிறது. இந்த விவகாரத்தில் உறுதியான முடிவை எடுக்க நாம் தவறிவிட்டோம். இரஷ்யாவின் போக்குக்கு நாம் எதற்காக அனுவசியமாகச் சப்பைக்கட்டு கட்டவேண்டும்?

அதிலும் பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி செய்ய முன்வந்துவிட்ட பிறகு அந்த நாட்டை நாம் எதற்காக ஆதரிக்கவேண்டும்?

இரஷ்யாவிலிருந்து இப்போது கிடைத்துவரும் இராணுவத் தளவாட உதவி இனிமேல் கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சத்தின் காரணமாகத்தான் இந்திய அரசு இரஷ்யாவைக் கண்டிக்கத் தயங்குகிறதா? அப்படியானால் இதற்கு உள்ளபடியே நான் வருந்துகிறேன்."

விஞ்ஞான அறிவு விரிவாகிறது

வானிலையைக் கட்டுப்படுத்தும் நேரம் நெருங்குகிறது

பெய்தும் கெடுக்கும்—பெய்யாமலும் கெடுக்கும் மழையின் மர்மம் இன்னும் முற்றும் தெரிந்தபாடில்லை; வானிலை பற்றி முழுமையாக அறிவதும், அதை மக்கள் நன்மைக்குத் தகுந்தபடி கட்டுப்படுத்தி நடத்துவதும் இரண்டு பெரிய காரியங்கள்; இவை இன்னும் கைகூடவில்லை.

கைகூட வேண்டும் என்பதற்கான ஆராய்ச்சியில் அமெரிக்கா ஏற்கெனவே முயன்று வருகிறது. விண்வெளியில் செலுத்திய அமெரிக்க வானிலைச் செயற்கைக் கோள்கள், உலகத்தை மூடியிருக்கும் மேக மூட்டத்தின் மர்மங்களை உற்றறிந்து வருகின்றன; வானிலை பற்றிய விஞ்ஞான அறிவை வளர்த்து வருகின்றன; வானிலையைக் கட்டுப்படுத்தவும் முயற்சிகள் நடக்கின்றன.

இந்த முயற்சிகளால் மிகுந்த நன்மை விளையும் என்று தெரிகிறது. வறண்ட இடங்களுக்கு வேண்டிய மழை பெய்விக்கலாம். மூடு பனியைக் கரைக்கலாம்; பனிப் புயல்களைத் தடுக்கலாம்; மின்னல்களைக் குறைக்கலாம்; சூறுவளிகளை முடக்கலாம்; சுருங்கச் சொன்னால், மக்களின் நன்மைக்காக வானிலையை விஞ்ஞானிகள் கட்டுப்படுத்தி ஆளலாம்.

இவையெல்லாம் ஏற்படச் சிறிது காலமாகும் என்றாலும், வானிலைக் கட்டுப்பாட்டுக்கு வேண்டிய முதல் முயற்சிகள் ஏற்கெனவே அமெரிக்காவில் ஆரம்பமாகிவிட்டன.

வானிலைத் தகவல்களை அறிவிக்கும் பல கருவிகளையும் அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இவற்றுள் ஒன்று—மழையளவை நிலப்படம்; இது சுவரில் மாட்டும் படம்; இப்படம் தன் எல்லைக்குட்பட்ட நிலப்பகுதியில் எவ்வளவு மழை பெய்கிறது என்பதை உடனே தெரிவித்துவிடுகிறது.

இவ்வாண்டு இறுதிக்குள்!

வாஷிங்டன், ஆக. 26—

இந்த ஆண்டு இறுதிக்குள், 1,150 மைல் தொலைவிலுள்ள இலக்குகளைத் தாக்கக்கூடிய ஏவுகணைகளைச் செஞ்சீனா தயாரித்துவிடுமாம்!

1970-ம் ஆண்டிற்குள் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளைச் செஞ்சீனா வைத்திருக்கக்கூடுமாம்!

தேசிய கீதம் பற்றி சீரிய யோசனைகள்

செயல்படுத்துவது எப்படி?

சென்னை, ஆக. 25—

ஏ. ஆர். தாமோதரன்:—"மற்ற நாடுகளில் செய்வதைப்போல குடியரசு நாள், சுதந்தர நாள் ஆகிய நாட்களில் மட்டுமே நாட்டுப் பண் (தேசிய கீதம்) பாடவேண்டும்; மற்ற விழாக்களிலும், திரைப்படக் காட்சிகளிலும் பாடக்கூடாது என்ற மரபு பின்பற்றப்படுமா?"

அண்ணா:—"குடியரசு நாள் — சுதந்தர நாள் போன்ற நாட்களில் மட்டும் நாட்டுப் பண் பாடப்பட வேண்டும் என்பது நல்ல யோசனைதான். ஆனால், 'துரதிருஷ்ட'வசமாக தி.மு.க. அரசு இதனைச் செயல்படுத்தினால், அதுபற்றி வெளியில் தப்பெண்ணம் தோன்றும்."

டி. கே. சண்முகம்:—"தேசிய கீதத்தைத் தமிழில் மொழி பெயர்த்துப் பாடினால் எல்லோரும் அதன் பொருளைப் புரிந்து கொண்டு மரியாதை செலுத்துவார்கள் அல்லவா?"

அண்ணா:—"தமிழில் மொழி பெயர்த்தால் இன்னும் நல்ல உணர்ச்சிமயமாக இருக்கும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்; ஆனால், தேசிய கீதத்தை ஒரே மொழியில் --- ஒரே முறையில்தான் நாடெங்கும் பாடவேண்டும் என்று விதியிருக்கிறது."

—சட்டமன்ற மேலவையில்

குறிக்கோளற்றவர்களாக நாம் ஆகிவிடக் கூடாது

சோஷலிசத்திலிருந்து காட்டுமிராண்டித்தனத்துக்கு வழிமாறிச் செல்லுவதா?

இரஷ்யாவின் போக்கு -- நாடாளுமன்றத்தில் செ. கந்தப்பன் கண்டனம்

புதுடில்லி, ஆக. 25—

"துன்பத்திற்கு இலக்கான நாடொன்றுக்கு அனுதாபம் தெரிவிப்பதில் தவறொன்றுமில்லை. இந்த அனுதாபத் தன்மையால் கூட்டுச் சேராக் கொள்கை பாதிக்கப்படமாட்டாது. ஏற்கனவே, பல நிகழ்ச்சிகளில் துன்பத்துக்கும், கொடுமைக்கும் உள்ளான நாடுகள் பலவற்றிற்கு நாம் இரக்கம் காட்டும் வகையில் நடந்துள்ளோம்; எனவே, தூற்றலுக்கு ஆளாகியுள்ள நாட்டினரின் நியாயமான செயலுக்கு நம் ஆதரவு உண்டு என்று கூறுவோமாக!

"நம் நாட்டின் ஆத்மா எனப்படும் உயிர்ப்புத் தன்மையினைக் காட்ட வேண்டுமானால், இதுபோன்ற நிலையில் நாம் சரியானபடி நடந்துகொள்வதைக் கொண்டே காட்டமுடியும்; அப்படி நாம் செயல்படவில்லையென்றால், 'குறிக்கோளற்ற சோற்றுப் பிண்டங்கள்' என்றே நாம் மதிக்கப்படுவோம்"

என்று மக்களவையில், கழக உறுப்பினர் செ. கந்தப்பன் அவர்கள், செக்கோஸ்லோவேகியாமீது இரஷ்யா ஆக்கிரமிப்பு செய்ததன் தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட திருத்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

செக் நாட்டில் இரஷ்யாவின் படையெடுப்புப் பற்றி இந்த அவையில் அறிக்கைவிட்ட தலைமையமைச்சர் ஆழ்ந்த வருத்தத்துடன் அதனை வெளியிடுவதாகக் கூறினார்கள்.

வருத்தம் என்பதை அதிர்ச்சி யென்று குறிப்பிட விரும்புகிறேன்.

நாம் நாகரிக நிலையிலிருந்து காட்டுமிராண்டித்தனத்தை நோக்கிப் போய்க்கொண்டிருப்பது போன்ற உணர்வே இந்த அதிர்ச்சியை உண்டாக்கியது.

சோஷலிச நிலையிலிருந்து வழி மாறி சிறுகச் சிறுக ஏகாதிபத்திய மாசு படியும் நிலைக்குச் சில நாடுகள் போவது கண்டு அதிர்ச்சி ஏற்படுகிறது.

'அமைதி விரும்புவோர்' என்ற முறையில் இப்படிப்பட்டதோர் போக்கினை நாம் வரவேற்க முடியாது.

சோஷலிசக் கொள்கையின் தலைமை நிலையில் இருப்போராகத் தம்மைக் கூறிக்கொள்வோர்கூட 'அனைத்து நாட்டு அமைதி' என்ற பெயரில் தங்கள் நாட்டுக்குள் சில பல நிகழ்ச்சிகளுக்கு இடம் தந்தே உள்ளனர்.

இந்த முறையில், அனைத்து நாட்டு அமைதியை நிலைநாட்டும் வகையில், செக் நாட்டுக்குள் சென்றுள்ள இரஷ்யப் படைகள் விரைவில் திருப்பி அழைக்கப்பட வேண்டும் என்று நாம வலியுறுத்த வேண்டும்."

அற்ப மகிழ்ச்சி புகழைப் பெருது!

படத்தைப் பார்த்தால் மட்டும் போதாது--- புரிந்து கொள்ளும் பக்குவமும் தேவை

மார்ட்டின்:—"'நாடோடி மன்னன்' என்ற படத்தில் நடோடி ஒருவன் மன்னனாகிறான். மன்னனான பிறகு அவன் சில திட்டங்களைக் கூறுகிறான்; அப்பொழுது, 'குடிசைகள்' என்ற குரல் எழும்புகிறது; உடனே, 'கொளுத்தப்படும்' என்று அவன் கூறுகிறான். நாடோடிகள் நாடாள வந்தால் என்ன நடக்கும் என்பதையே அது காட்டுகிறது."

அமைச்சர் மு. கருணாநிதி:— "அந்தப் படத்திற்குக் கதை-வசனம் எழுதியவர்களில் ஒருவர் இப்போதைய காங்கிரசுத் தளபதி!"

மார்ட்டின்:—"கதை-வசனம் யார் எழுதியிருந்தாலும் அதனுடைய கருத்தைத்தான் கவனிக்க வேண்டும்."

அண்ணா:—"'நாடோடியாக இருந்தவர்கள் நாடாள வந்தார்கள்' என்று குறிப்பிடுவதன் மூலம், எங்களை, 'நாடோடிகள்' என்று கனம் உறுப்பினர் குறிப்பிட விரும்புகிறார். அவர்கள் ஏதோ பரம்பரை இராசகுலத்தில் வந்ததுபோல் பேசுகிறார்கள். இராசகுலத்தில் பிறந்தவர்கள் நாடாள வேண்டுமென்ற கருத்தை நாடு ஏற்றுக்கொள்ளாது! அந்தப் படத்தில்கூட, நாடோடியாக இருந்ததால் அவர் நாடாள வரவில்லை; உருவ அமைப்பில் மன்னனைப் போல் இருந்ததால் அந்தச் சூழ்நிலை ஏற்பட்டது. படத்தைப் பார்த்தால் மட்டும் போதாது --- அதைப் புரிந்துகொள்ளவும் வேண்டும்."

மார்ட்டின்:—"புரிந்து கொண்டுதான் பேசுகிறேன்."

அண்ணா:—"நாடோடிகள் நாடாள வந்தால் இப்படித்தான் நடக்குமென்று பொதுவாகக் கூறுவது பண்பான பேச்சுத்தானா? நான், கதைக்குள்ளே புக விரும்பவில்லை; 'நாடோடியாக இருந்தவர்கள் நாடாள வந்தால் இப்படித்தான் நடக்கும்' என்று பேசுவது சரிதானா என்று கேட்கிறேன். நாடோடிகள் நாடாள வருவது பெருமைக்குரியதுதான்; ஆனால் நாடாண்டவர்கள் நாடோடியாவதுதான் வருத்தத்திற்குரியது!"

மார்ட்டின்:—"இப்போது நாடோடியாக இருப்பவர்கள் மீண்டும் நாடாள வருவது என்பது நிச்சயம்தான்."

அண்ணா:—"சுக்கிரதிசை அடித்தால் யார் வேண்டுமானாலும் நாடாள வரலாம்; ஆனால் நாடோடிகள் நாடாள வந்தால் இப்படித்தான் நடக்குமென்று பேசுவது சரியல்ல என்று நான் கூறுவது, 'நல்ல பேச்சாளராக மார்டின் மாறவேண்டும்' என்ற கருத்தில்தான்! இது வேண்டுமானால், 'நாடோடி என்று நான் அவர்களைச் சொன்னேன் பார்த்தாயா' என்று வெளியில்சென்று கூறும்போது அற்ப மகிழ்ச்சி ஏற்படலாம்; ஆனால் அது, நீண்டகாலப் புகழைப் பெருது!"

—24—8—68 சட்டமன்ற நிகழ்ச்சி

பிற தொழில்களுக்கு இணையாக வேளாண்மை

விவசாயிகளின் மதிப்பை உயர்த்துவதற்கான நடவடிக்கை

ஜெர்மன் குடியரசின் புதிய திட்டம்

வேளாண்மைத் துறையில் இன்று எவ்வளவோ நவீன முறைகள் கையாளப்படடு வருகின்றன.

நிலத்தை உழுது திருத்துவது முதல் முற்றிச் சாய்ந்த கதிரை அறுவடை செய்வது வரையில் சாகுபடிக்கான எத்தனையோ பணிகளை இயந்திரங்களே செய்துமுடிக்கின்ற காலம் இது!

இருந்தாலும், 'வேளாண்மை என்பது ஒரு கிராமியத் தொழில்' என்ற எண்ணமே இன்னமும் இருந்துவருகிறது.

வேளாண்மை இல்லையேல், மனிதனின் உயிர்நாடியான வயிற்றுப் பிரச்சினை, பெரும் அளவில் வளர்ந்துவிடும் என்பது உண்மைதான் என்றாலும், மற்ற கனரகத் தொழில்களுக்கு அளிக்கும் மரியாதையையும் தகுதியையும் வேளாண்மைத் தொழிலுக்குக் கொடுக்க நாம் தவறிவிடுகிறோம்.

வேளாண்மைத் துறைக்குப் போதிய அளவு ஊக்கமளித்த போதிலும், அந்தத் தொழிலுக்கு உரிய மரியாதை அளிக்கப்படுவதில்லை என்பதை உணர்ந்த ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு அந்தத் தொழிலும் நாட்டின் பொருளாதாரத்துக்கு ஒரு முக்கியமான அம்சம் என்பதை உணர்த்தும் வகையில் புதிய கொள்கைகளைப் புகுத்தி வருகிறது.

கடந்த காலத்தைப்போலன்றி, வேளாண்மையையும் பல்வேறு முற்போக்கான தொழில்களுள் ஒன்றாகக் கருதிப் பொருளாதார நோக்குடன் அதனை அணுக வேண்டும் என்ற கருத்தில் ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு இன்று செயல்பட்டு வருகிறது.

வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு இயன்ற வரை கூடுதலான வருவாய் தேடித்தர வாய்ப்பளிப்பதும் பொதுமக்களுக்குக் குறைந்த விலையிலான உணவுப் பண்டங்கள் கிடைக்க வழி வகுப்பதும் ஐரோப்பிய வர்த்தகச் சந்தையில் அங்கம் வகிக்காத பிற நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் உணவுப் பொருள்களின் அளவைக் கூடுதலாக்குவதும் விவசாயத் துறையில் ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு கொண்டுள்ள புதிய கொள்கையின் நோக்கமாகும்.

வேளாண்மைத் தொழில் உற்பத்தித் திறனைப் பெருக்குவதும் வேளாண்மை இலாபகரமாக நடைபெறாத பகுதிகளில் விவசாயிகளுக்கு மாற்று வேலை அளிப்பதும் இந்தக் கொள்கையின் மற்று மிரு குறிப்பிடத்தக்க குறிக்கோள்களாகும்.

மேற்கு ஜெர்மனியில் அரசாங்கத்தின் உத்தரவாத விலை நிர்ணயத்தின் வாயிலாகவும் மற்றும் பல மானியங்களாலும் மட்டுமே விவசாயிகள் பிற தொழிலாளர்களுக்குச் சமமான வருவாயைப் பெற்று வருகின்றனர். இதன் காரணமாக விவசாயிகள் தொழிலாளர்களைக் காட்டிலும் சற்று மாற்றுக் குறைவானவர்களாக இருப்பதாகவே எண்ண நேரிடுகிறது. எனவே, இத்தகைய சலுகைகளை அகற்றி, அதேசமயம் விவசாயிகளின் வருமானம் குறைந்துவிடாமலிருக்கவும் வழி காணும் வகையில் இந்தப் புதிய கொள்கை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்தப் புதிய கொள்கையின் காரணமாக நாட்டின் விவசாயத் தொழில் அடித்தளத்திலிருந்து மேல்மட்டம் வரையில் அடியோடு உருமாறி, புதிய கோலத்தில் புத்துயிர் பெற்றுத் திகழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கரிசல்குளத்தில்

மின் விளக்கேற்று விழா

மதுரை வடக்கு வட்டம்—விளாங்குடி ஊராட்சி மன்றத்தைச் சேர்ந்த கரிசல்குளம் கிராமத்தில் 15—8—68-ம் நாளன்று திருப்பரங்குன்றம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் எஸ், அக்கினிராசு பி.ஏ. அவர்கள் ஊராட்சி மன்றத் தலைவர் எம். அழகு தலைமையில் தெரு மின் விளக்கேற்றி வைத்து தமிழக அரசு செய்து வரும் பொதுப் பணிகளை விளக்கிப் பேசினார்.

மக்களின் குறைகளை உடனுக்குடன் கவனித்து ஆவன செய்ய முத்தரப்பு மாநாடு 8—9—68-ல் மதுரை தெற்கு வட்டம் திருப்பரங்குன்றம் ஒன்றிய வளையங்குளத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்றும் கூறினார்.

திரு. எஸ், மணி நன்றி கூறினார்.

வடபழனி எம்.ஜி.ஆர். மன்றம்

வடபழனி எம். ஜி. ஆர். மன்ற நிர்வாகிகள் தேர்தல், 11—8—68 அன்று நடைபெற்றது; கீழ்க் கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : சி. மருதாசலம்; செயலாளர் : டி. இராமசாமி; பொருளாளர் : வி. என். திருமூர்த்தி; வட்டப் பிரதிநிதி: ஏ. பழனிசாமி; மற்றும் பதினைந்துபேர் செயற்குழு உறுப்பினர்கள்.

கழகச் சொற்பொழிவாளர்களுக்கு

வேண்டுகோள்

கழகச் சட்ட திட்டம் விதி 8-ன்படி, கழகச் சார்புடைய மன்றங்கள்---படிப்பகங்கள், அந்தந்த ஊர்க் கிளையின் (சென்னையில் வட்டக் கிளை) அனுமதியைப் பெற்றே பிரசாரக் கூட்டங்களை நடத்துதல் வேண்டும். எனவே சார்பு மன்றங்கள், படிப்பகங்கள் கழகச் சொற்பொழிவாளர்களையும், இசை நிகழ்ச்சி நடத்துவோரையும் அணுகும்போது, சம்பந்தப்பட்ட அனுமதி பெறப்பட்டிருக்கிறதா என்பதை அறிந்து ஒப்புதல் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நாடெங்கும் கழகக் கிளைகளும், சார்பு மன்றங்களும் அமையப் பெற்றிருக்கையில், 'கழக ஆதரவாளர்கள்' என்ற பேரால் கழக நிகழ்ச்சிகளை நடத்துவது கழகக் கட்டுக்கோப்புக்குப் புறம்பான செயலாதலால் அவ்வித நிகழ்ச்சிகளிலும் கழகச் சொற்பொழிவாளர்கள் கலந்துகொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.

விழுப்புரம் வட்ட தி.மு.க. தேர்தல்

விழுப்புரம் வட்ட தி. மு. கழகத் தேர்தல் ஏற்கனவே அறிவித்திருந்தபடி, 1—9—68 காலை 10 மணிக்கு, விழுப்புரம் முனிசிபல் பயணியர் விடுதியில் நடைபெறும்.

அவைத் தலைவர் பொறுப்புதவிர, மற்ற எல்லாப் பொறுப்புகளுக்கும் தேர்தல் நடைபெறும். தேர்தல் ஆணையாளர் : தோழர் சா. கணேசன் எம்.சி.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

75 நிமிடங்களில் ஓர் ஏக்கர் நிலத்தை உழுதுவிடும் இயந்திரம்

சாதாரணமாக மரக்கலப்பை ஒன்றில் மாடுகளைப் பூட்டி உழுதால் ஒரு ஏக்கர் நிலத்தை உழுவதற்கு சுமார் 20 நாட்கள் ஆகின்றன. இதே வேலையைச் செய்ய ஒரு இயந்திரம் பிரிட்டனில் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்த ஒரு ஏக்கர் நிலத்தையும் உழுவதற்கு அது எடுத்துக் கொள்ளும் நேரம் 75 நிமிடங்கள் தான்! ஒரு நாளைக்கு எத்தனை ஏக்கர் நிலத்தை உழலாம் என்பது இதிலிருந்து தெரிகிறது.

சில விவசாய நாடுகளில் காளை மாடுகளைப் பூட்டி ஏர் உழுதுவருகின்றனர்; ஆனால் சில இடங்களில் கறவை மாடுகளையே—பசு, எருமை—ஏரில் பூட்டிவிடுகின்றனர். காலையில் பால் தரவேண்டும்; பகலெல்லாம் ஏரில் பூட்டிவிட்டு, மாலையில் மீண்டும் மடியைப் பிடித்தால் அது உதைக்காமல் என்ன செய்யும்? பலன் தரும் மாடுகள் எல்லாம் இதனால் பலன் குன்றிப்போவதுடன், அப்படிச் செய்தும் நாட்கள் அதிகம் ஆவதைக் குறைக்க முடிவதில்லை. இதற்கு ஒரு முடிவுதான் மேலே சொன்ன இயந்திரம்.

அரிசி விளைச்சலில் முன்னணியில் இருக்கும் ஜப்பான், தாய்லாந்து நாடுகளும், மற்றும் பிலிப்பைன்ஸ், இலங்கை, மலேசியா ஆகிய நாடுகளும் இந்த இயந்திரத்தின் அரிய பயன் கருதி ஏராளமான அளவில் 'ஆர்டர்'கள் கொடுத்துள்ளன.

சென்னை --- ஷெணாய்நகர் அன்பழகன் மன்றம்

சென்னை—ஷெணாய்நகர் புருவரி சாலை பேராசிரியர் அன்பழகன் மன்ற நிர்வாகிகள் தேர்தல், வட்டச் செயலாளர் ச. வெ. தட்சிணாமூர்த்தி முன்னிலையில் 21—7—'68 அன்று நடந்தது. இ. வடிவேல் தலைவராகவும், த. நாராயணசாமி செயலாளராகவும், அ. பொ. மாணிக்கம் துணைச் செயலாளராகவும், ந. கண்ணாயிரம் பொருளாளராகவும், மற்றும் 15 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை 29-வது வட்டம் கருணாநிதி மன்றம்

சென்னை 29-வது வட்டம் கருணாநிதி பொதுப்பணி மன்ற நிர்வாகிகள் தேர்வு 20—8—68-ல் நடைபெற்றது; அதுபோது, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வருமாறு:—

தலைவர் : இரா. து. மணி; செயலாளர் : சி. ஜி. இராதாகிருட்டினன்; துணைச் செயலாளர் : ஆர். பஞ்சாட்சரம்; பொருளாளர் : கே. எஸ். அருணகிரி; செயற் குழு உறுப்பினர்கள் : இரா. முத்து கிருட்டினன், ஆர். இராசாராம், எம். இராமச்சந்திரன், எத்திராசு, மோகன், பா. சண்முகம், கே. பாலகிருட்டினன்.

தலைமைக் கழக அறிக்கை

சார்பு மன்றங்கள் -- துணை அமைப்புகளின் நிர்வாகிகளுக்கு அறிவிப்பு

கழகச் சட்ட திட்டம் விதி 8-ன்படி, கழகச் சார்புடைய மன்றங்கள், படிப்பகங்கள் ஆகிய துணை அமைப்புகளின் நிர்வாகிகள் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்துவதென்றால், சம்பந்தப்பட்ட ஊர்க் கழகக் கிளையின் (சென்னையில் வட்டக் கிளையின்) செயலாளருடைய அனுமதியைப் பெற வேண்டும். எக்காரணங் கொண்டாவது கிளையின் செயலாளர் அனுமதி தருவதற்கு மறுத்தால், சார்பு மன்றங்கள் முறையாக மேலமைப்புகளுக்கு முறையீடு செய்து முடிவு அறிந்த பின்னரே கூட்டங்கள் நடத்தும் செயல்களில் ஈடுபட வேண்டும்.

இந்த விதியை மீறி துணை மன்றங்கள் தம்மிச்சையாகக் கூட்டங்கள் நடத்துவது போன்ற செயல்களில் ஈடுபட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

நாடெங்கும் கழகக் கிளைகளும், சார்பு மன்றங்களும் அமையப் பெற்றிருக்கையில், 'கழக ஆதரவாளர்கள்' என்ற பெயரால் கூட்டங்களை நடத்துவது, கழகக் கட்டுக்கோப்புகளைச் சீர்குலைப்பதாகும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

கிளைக் கழகச் செயலாளர்களும், முறைப்படி சார்பு மன்றங்களின் வேண்டுகோளை ஏற்று உடன் அனுமதி அளித்து ஊக்குவிக்க வேண்டுகிறோம்.

'அறிவகம்', சென்னை-13
24—8—68

என். வி. நடராசன்
அமைப்புச் செயலாளர், தி.மு.க.

சித்தன் நினைவு நாள் பொதுக்கூட்டம்

சேலம் — அம்மாபேட்டையில் 18-8-68 அன்று கே ஆர். சித்தன் நினைவு நாள் பொதுக்கூட்டம், 21-வது வட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்றது; தோழர் பொன்னுசாமி தலைமைதாங்கினார்.

தோழர்கள் சி. பழனியப்பன் எம்.சி., பி. எஸ். மாணிக்கம் எம்.சி., ஏ. மாரியப்பன் எம்.சி., தண்டபாணி (சுதந்தரா), சின்னய்யன் (தமிழரசுக் கழகம்), கே. எஸ். மணி ஆகியோர் மறைந்த கே. ஆர். சித்தன் கழகத்திற்கு ஆற்றிய தொண்டு பற்றியும், கழக அரசின் சாதனைகளை விளக்கியும் பேசினர்.

இறுதியாக, தோழர் வெ. கண்ணன் கே. ஆர். சித்தன் தியாகத்தைப் பற்றியும் காங்கிரசாரின் போக்கையும் விளக்கி உரையாற்றினர்.

பெங்களூரில் திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுவிழா

பெங்களூர்த் தமிழ்ச் சங்கம், திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு விழாவை 1969 சனவரி முதல் டிசம்பர் முடிய ஓராண்டுக் காலம் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டுள்ளது.

மாபெரும் ஊர்வலத்துடன் திருவள்ளுவர் விழாவைத் தொடங்குவது; திருக்குறள் கண்காட்சி நடத்துவது; உலகிலுள்ள பல மொழிகளிலும் வந்துள்ள குறள் மொழி பெயர்ப்பு நூல்களைத் திரட்டுவது; தமிழ், கன்னடம், ஆங்கிலம் முதலிய மொழிகளில் புதிய கோணங்களில் கட்டுரைப்போட்டி வைத்துப் பரிசு வழங்குவது; திருக்குறள் இசைப் போட்டி, மனப்பாடப் போட்டி நடத்துவது—ஆகியவைகளுக்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

ஒரத்தநாடு எம்.ஜி.ஆர். மன்றம்

ஒரத்தநாடு எம். ஜி. ஆர். மன்றம்—படிப்பகத் திறப்பு விழா, 11—8—68-ல் தோழர் இராசன் தலைமையில் நடைபெற்றது; திரு. எல். கணேசன், மன்றத்தைத் திறந்துவைத்தார்.

மன்ற நிர்வாகிகள் வருமாறு:— தலைவர் : எம். வெங்கடாசலம்; செயலாளர் : இரா. சேது; துணைச் செயலாளர் : மாரா; பொருளாளர் : நா. பாலு; செயற்குழு உறுப்பினர்கள் : இளங்கோ, பஞ்சநாதன், பஷீர், முத்து, படிவாசகம், தட்சிணாமூர்த்தி, சின்னத்தம்பி.

கலைக் குழுக்கள் முகவரி

வள்ளுவர் கலை மனறம் அளிக்கும் தாசன்—மாலா குழுவினர் பங்கேற்கும் 'நமது அரசின் சாதனைகள்' என்ற கலை நிகழ்ச்சி நடத்த விரும்புவோர் தொடர்பு கோள்க :—

த. கருணாகரன், வள்ளுவர் கலை மன்றம், 23, கீழ் ஆண்டார் தெரு, திருச்சி-2

சென்னையில் செப்டம்பர் 16 முதல் 24-ம் நாள் வரை முருகு பாண்டியன் கலை நிகழ்ச்சி நடத்த விரும்பும் கழகத் தோழர்கள் கீழ்க் காணும் முகவரிக்குத் தொடர் கொள்ளலாம் :—

எம். ஆர். சந்திரன், பெருமாள் கோவில் தோட்டம், 2-வது சந்து, சென்னை-1

மதுரை முத்து கலைக் குழு, ரஜனி—மாணிக்கம் பங்கேற்கும் 'எழுபத்திரண்டும் எங்கள் கையில்' என்ற கலை நிகழ்ச்சி நடத்த விரும்புவோர் தொடர்பு கொள்க :—

எஸ். டி. நடராசன், 224-ஏ, மேலமாசி வீதி, மதுரை-1. தொலைபேசி எண் : 5330.

நாவலர் கலைக் குழுவின் கருப்பையா—பாலன் பங்கேற்கும் தி. மு. க. கலை நிகழ்ச்சி நடத்த விரும்புவோர், கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்க :—

16, இசுமாயில்புரம், 12-வது தெரு, முனிச்சாலை ரோடு, மதுரை-9

புதுவை பெருநகரக் கழக மறு தேர்தல்

புதுவை பெருநகரக் கழக மறு தேர்தல் 1—9—68 ஞாயிறு காலை 10-மணிக்கு புதுவை நகர் அம்பலத்தாடு அய்யர் மடத்து வீதி திருமண மண்டபத்தில் நடைபெறும்.

செயலாளர் ஒருவர், பத்து மாவட்டப் பிரதிநிதிகள் ஆகிய பொறுப்புகளுக்கு மட்டும் மறு தேர்தல் நடைபெறும்.

செயலாளர் பொறுப்புக்கு மட்டும் 28—8—68-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்குச் சேரும்வகையில் விண்ணப்பத் தாள்கள் உரிய கட்டணத்துடன் அனுப்பி வைக்கவேண்டும்.

மாவட்டப் பிரதிநிதிகளுக்கு ஏற்கனவே அனுப்பியுள்ள விண்ணப்பத் தாள்களின் அடிப்படையில் நடைபெறும். தேர்தல் ஆணையாளர்: தோழர் கே. கோவிந்தசாமி எம்.சி.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

புதுவை மாவட்ட தி. மு. க. தேர்தல்

புதுவை மாவட்டக் கழகத் தேர்தல் 8—9—68 ஞாயிறு காலை 10 மணிக்கு, புதுவை நகர் அம்பலத்தாடு அய்யர் மடத்து வீதி திருமண மண்டபத்தில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

இருபதாண்டுக் காலம் என்ன செய்தீர்கள்?

ஏழைகள்மீது உங்கட்குப் பரிவு இப்போதுதான் ஏற்பட்டதா?

காங்கிரசு உறுப்பினரின் குற்றச்சாட்டுக்கு முதலமைச்சர் அண்ணா பதில்

சென்னை, ஆக. 27—

காங்கிரசு கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்துக் காங்கிரசு உறுப்பினர் எஸ். இராமலிங்கம் பேசுகையில், 'பராசக்தி' படத்தில் வரும் 'எச்சிலைதனிலே எறியும் சோத்துக்குப் பிச்சைக்காரர் சண்டை ரோட்டிலே' என்ற பாடலைக் குறிப்பிட்டு, 'இன்றுள்ள நிலை என்ன? இது ஏன் போக்கப்படவில்லை?' என்று கேட்டார்.

முதலமைச்சர் அண்ணா அவர்கள் இதற்குப் பதிலளிக்கையில்' 'எங்களுக்கு 15 ஆண்டுக்கால அவகாசத்தை இந்த நாட்டு மக்கள் அளிப்பார்களானால், நாட்டில் இன்றுள்ள சீர்கேடான நிலைமைகளை மாற்றிக் காட்டுகிறோமா இல்லையா என்று பாருங்கள்' என்று கூறினார்.

எஸ். இராமலிங்கம் :— "பொதுத் தேர்தல் நேரத்தில், வாட்டத்திலுள்ள தாய் குழந்தைக்குப் பால் இல்லாமல் குழந்தையைக் கிணற்றில் போடுவதாகச் சுவரொட்டி போட்டீர்களே— அந்த வாட்டம் போய்விட்டதா? வறுமை அகன்றுவிட்டதா?— என்று கேட்கிறேன்; இன்றைக்குக்கூட சென்னையில் பாருங்கள் —(என்று ஒரு படத்தைக் காட்டினார்) இந்தத் தாய்க்குப் பால் இருக்கிறதா?"

அண்ணா :— "பால் இல்லாத குழந்தைகள் -- வாட்டமுற்ற தாய்மார்கள் போன்றவர்களின் நிலையை இந்த ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகாவது உணர்ந்ததற்காக மிக்க நன்றி! கடந்த 20 ஆண்டுக் காலமாக இப்படிப்பட்ட நிலைமை இருந்தபோது நண்பர்களின் வாய் அடைத்துப் போயிருந்ததா? இவ்வளவு காலம் வாய் திறக்காததன் காரணம் என்ன?"

எஸ். இராமலிங்கம் :— "நாங்கள் செய்த பாவத்திற்குதான் இப்போது அனுபவிக்கிறோம்."

அண்ணா :— "தாங்கள் செய்த பாவத்தை அனுபவிப்பதாக உறுப்பினர் தெரிவித்தார். நான் அப்படிக்கூடச் சொல்லவில்லை. ஒருவேளை அவர்களுக்கே அவர்களுடைய மனச்சாட்சி உறுத்துகிறதோ என்னவோ தெரியவில்லை; நான் கேட்பதெல்லாம், இந்த 15 மாதம்--அதாவது ஒன்றரை ஆண்டுக்காலமாக ஏதோ சில இடத்தில் நடந்ததுபற்றி கேட்கத் தோன்றுகிறதே --கடந்த 20 ஆண்டுக் காலமாக இப்படிப்பட்ட கோரமான நிகழ்ச்சிகள் நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருந்ததே---அப்போது இந்த நண்பர், சட்டமன்றத்தில்கூட இல்லை---கமிட்டிக் கூட்டத்திலாவது முறையீடு செய்துகொண்டாரா?"

எஸ். இராமலிங்கம் :— "கட்சிக் கூட்டத்தில் சொல்லியிருக்கிறேன்."

அண்ணா :— "கட்சிக் கூட்டத்தில் சொல்லியும் அவர்கள் கவனிக்காமல் இருந்தது பற்றி வருத்தப்படுகிறேன்."

—சட்டமன்ற நிகழ்ச்சி

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

29--8--68

நகரி

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு சந்தை மைதானத்தில்; தலைவர் : நந்தகோபால்; பேசுவோர் : அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன் எம்.எல்.சி., வி. நரசிம்மலு, கே. எம். எர்ரய்யா, என். வி. வீராசாமி, கே. ஜி. முருகேசன், டபிள்யூ. குப்புசாமி, கே. பி. சித்தையா, எம். எஸ். அமீத்.

ஒத்தவீடு

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு மந்தைத் திடலில்; தலைவர் : பெ. சின்னையா ; பேசுவோர்:சி.பி.சிற்றரசு எம்.எல்.சி., ச. பெ. மலைச்சாமி எம்.எல்.ஏ., பி. எஸ். மணியம் எம்.எல்.ஏ., எம். எஸ். சந்தானம், கூ. குருசாமி, அ. இராசன், எம். மணி, இரா. மு. பிச்சையப்பன், முருகன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அறிவி அச்சகத்தில் (24, ஞானியப்பநாயகன் செங்கத் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

பக்தவத்சலம் செய்தது தவறுதானாம்!

சட்டமன்றக் காங்கிரசுக் கட்சித் தலைவர்கள் வாதம்!

சென்னை, ஆக. 26—

பொன்னப்ப நாடார் :— "அட்வகேட்-ஜெனரல் பதவி நாராயணசாமி முதலியாருக்குத் தரப்பட்டது; அவர் அந்தக் கட்சிக்காக வாதாடினார் என்பதற்குப் பரிசா?"

அண்ணா :— "முன்பு அவர்கள் ஆட்சிக் காலத்தில் வி. பி. இராமன் என்பவருக்கு பப்ளிக் பிராசிகியூட்டர் பதவி தரப்பட்டது. அவர், முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலத்துக்காக வாதாடியவர்; அதற்காக அந்தப்பதவி அவருக்குத் தரப்பட்டது என்றால் இவருக்கும் அதே காரணத்துக்காக இந்தப் பதவி தரப்பட்டது எனக் கொள்ளலாம்; ஆனால் இரண்டு பேருக்கும் தந்தது பரிசல்ல; ஏனெனில், அவர்கள் அந்த வழக்குகளுக்காகத் தனி 'பீஸ்' பெற்றுக் கொண்டார்கள்."

பொன்னப்ப நாடார் :— "அப்போது இருந்தவர்தான் தவறு செய்தார் என்றால், நீங்களும் ஏன் தவறு செய்கிறீர்கள்?"

அண்ணா :— "காலம் கடந்தாவது அவர் செய்ததைத் தவறு என்று ஒத்துக்கொண்டதற்காக மிக்க நன்றி."

கருத்திருமன் :— "அவர்கள் செய்தது 100-க்கு 10 தவறுகள் என்றால், நீங்கள் செய்வது 100-க்கு 75 தவறுகள்."

அண்ணா :— "கணக்குப் போட்டே தலைவரைக் காப்பாற்ற எடுத்துக்கொண்ட முயற்சிக்கு நன்றி."

—சட்டமன்றத்தில் : 26—8—68

கருத்திருமன் கருத்தைக் கட்சி மேலிடம் ஏற்குமா?

'அகிலஇந்திய'க் கண்ணோட்டம் இதற்கு இல்லையா?

சென்னை, ஆக. 26—

சட்டமன்ற எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் பேசுகையில், 'தென்காசித் தேர்தலுக்கு முன் போலீசு ஐ. ஜி. அவர்கள், இந்த மாநிலத்தின் சட்டம்-ஒழுங்கு பற்றி பத்திரிகைகளில் அறிக்கை தந்தார்: அது சரிதானா? முறைதானா? என்று வினவினார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் அண்ணா அவர்கள், 'இதற்கு முன்னிருந்த அரசாங்கம் நடந்தபோது ஐ. ஜி. யும், கமிஷனரும் அறிக்கை தந்திருக்கிறார்கள்; அந்த அறிக்கைகளையும் இந்தஅறிக்கைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால், கருத்து வேறுபாடோ முரண்பாடோ இருக்காது' என்றார்.

"இனிமேல் எந்த அரசியல் கட்சி ஆட்சிபீடம் ஏறினாலும் அதிகாரிகள் விளக்க அறிக்கைகள் தரக்கூடாது என்பதைக் காங்கிரசுக் கட்சி ஒத்துக்கொள்ளத் தயாராகஇருக்கிறதா?" என்றும் அண்ணா அவர்கள் கேட்டார்.

கருத்திருமன :— "காங்கிரசு ஆட்சியில் இதுபோன்ற அறிக்கைகள் இந்தத் தன்மையில் வெளியிடும் துணிவு அதிகாரிகளுக்கு இருந்ததில்லை. இப்போதுகூட அவ்விதமான அறிக்கைக்களைத் தடுக்க அரசு முன்வந்தால் காங்கிரசுக் கட்சி ஆதரவு தரும்."

அண்ணா :— "இங்கே ஆதரவு தருவது பற்றியல்ல பிரச்சினை; நீங்கள் அகில இந்தியக் கட்சி; அகில இந்தியாவிலும் பல மாநிலங்களை ஆளுகிறீர்கள்; ஆகவே, 'இனிமேல் அதிகாரிகள், நிலைமை விளக்க அறிக்கை தரக்கூடாது' என்று அகில இந்திய ரீதியில் ஒரு சுற்றறிக்கை அனுப்பி அகில இந்தியத் தலைவர்கள் உட்கார்ந்து பேசுவதற்கு ஏற்பாடு செய்வார்களா?"

கருத்திருமன் :— "இப்படித்தான் நேரடியாக முதலமைச்சர் எதையும் ஒப்புக்கொள்வதில்லை; அகில இந்தியாவோடு விட்டாரே --- அகில உலகத்துக்கும் சேர்த்துச் சொல்லவில்லை என்பதைக் கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன்."

அண்ணா :— "நீங்கள் அகில உலகத்துக்குமாகப் பேச வேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறேன்; ஆனால், அகில இந்திய அளவோடு தான் இருக்கிறீர்கள்; ஆகவே இந்த அளவிலாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறுகிறேன்."

குமரி மாவட்டக் கழகத் தேர்தல்

குமரி மாவட்டக் கழகத் தேர்தல் 13-9-68 வெள்ளி காலை 10-மணிக்கு வடசேரி பயணிகள் விடுதியில் நடைபெறும்.

மாவட்டக் கழகத் தேர்தலில் போட்டியிட விரும்பும் தோழர்கள் 8-9-68-க்குள் தங்களின் வேட்பாளர் விண்ணப்பத் தாள்களைத் தலைமைக் கழகத்திற்குச் சேரும் வகையில் உரிய கட்டணத்துடன் அனுப்பிவைக்க வேண்டும்.

ஏற்கனவே அனுப்பியுள்ள விண்ணப்பங்களையும் ஏற்றுத் தேர்தல் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

இட மாற்றம்

இன்றைய 'நம் நாடு' இதழ் மூன்றும் பக்கத்தில் வெளியாகியுள்ள புதுவைப் பெருநகர தி. மு. க. தேர்தல் அறிவிப்பில் கண்டுள்ள 'இடம்' மாற்றப்பட்டிருக்கிறது.

அம்பலத்தாடு ஐயர் மடத் தெரு திருமண மண்டபத்தில் நடைபெறுவதாக இருந்த தேர்தல், புதுவை நகர் செஞ்சிச் சாலைத் திருமண மண்டபத்தில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

சிறப்புக் கூட்டம்

ஐயம்பேட்டை நகர தி.மு.க. சார்பில், இ. அரங்கசாமி குடும்ப நிதிக்கான சிறப்புக் கூட்டம் 29-8-68 காலை 11 மணிக்கு ஐயம்பேட்டை கிருஷ்ணா தியேட்டரில் நடைபெறும்; தலைவர்: ப. நாராயணசாமி; பேசுவோர்: அமைச்சர் மு. கருணாநிதி, இரா. செழியன் எம்.பி., கோ.சி. மணி எம்.எல்.சி., ந. சோமசுந்தரம் எம்.எல்.ஏ., ந. சாமிநாதன், க.கோ. இராமச்சந்திரன்.

தெற்கு மடத்தில் வரவேற்பு நிகழ்ச்சி

பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி, மற்றும் இரா. செழியன் எம்.பி., கோ. சி. மணி எம். எல். சி., ந. சோமசுந்தரம் எம்.எல்.சி. ஆகியோருக்கு தெற்கு மடம் ஊராட்சிமன்றச் சார்பிலும், சுற்றுவட்டாரப் பொதுமக்கள் சார்பிலும், 29—8—68 பகல் 1-மணிக்கு பட்டம் வெட்டாறு பருசுத்துறை அருகில் மன்னை ப. நாராயணசாமி தலைமையில் வரவேற்பு அளிக்கப்படும்.

விளையாட்டரங்கு திறப்பு விழா

சென்னை 87-வதுவட்டம் இராஜா அண்ணாமலைபுரம் புனிதமேரி சாலையில் உள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடலில், கூடைப் பந்து விளையாட்டரங்கத்தை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து திறந்து வைப்பார்; இந்த விழா, 29-8-68 மாலை 6-30 மணிச்கு மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் தலைமையிலும்—திரு. வி. முருகேசன் முன்னிலையிலும் நடைபெறும்.

புதுவை அமைச்சரவை கவிழ்வது உறுதி!

புதுவை சட்டமன்றக் காங்கிரசுக் கட்சியிலிருந்து நான்கு பேர் விலகி எதிர்க் கட்சியில் சேர்ந்து விட்டதைச் சட்டமன்ற அவைத் தலைவரும், முதலமைச்சரும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சட்டமன்றத் தலைவர் திரு. மாணிக்கவாசக ரெட்டியாரும், காங்கிரசுக் கட்சியிலிருந்து விலகி விட்டார்.

இதனால் பெரும்பான்மை இழந்துவிட்ட காங்கிரசு அமைச்சரவை கவிழ்வது உறுதியாகிவிட்டது.

புதுவை சட்டமன்றம் ஆக.29-ம் நாள் கூடவிருக்கிறது என்பது நினைவுகூரத்தக்கது.

விளவங்கோடு வட்டம்

விளவங்கோடு வட்டக் கழகத்திற்கு மாவட்டப் பிரதிநிதி ஒருவருக்கான தேர்தல் மட்டும் 5—9—68 பிற்பகல் 4-மணிக்குக் குழித்துறை பயணிகள் விடுதியில் நடைபெறும், இதற்குரிய விண்ணப்பத் தாள்களை 31--8—68-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

அகத்தீசுவரம் வட்டம்

அகத்தீசுவரம் வட்டக் கழகத்திற்குச் செயலாளர் ஒருவர், மாவட்டப் பிரதிநிதி ஒருவர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் 5—9—68 காலை 10 மணிக்கு தெங்கம்புதூர் தியேட்டரில் நடைபெறும்.

செயலாளர் பொறுப்புக்கும், மாவட்டப் பிரதிநிதி பொறுப்புக்கும் புதிய விண்ணப்பத் தாள்கள், 31—8—68-க்குள் தலைமைக் கழகத்திற்குச் சேரும் வகையில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

தோவாளை வட்டம்

தோவாளை வட்டக் கழகத்திற்குச் செயலாளர் ஒருவர், துணைச் செயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர், மாவட்டப் பிரதிநிதிகள் 10 பேர், வட்டக் கழகச் செயற்குழு உறுப்பினர்கள் 14 பேர் ஆகிய பொறுப்புக்களுக்கான தேர்தல் 6—9—68 வெள்ளி காலை 10 மணிக்கு தடிக்காரன் கோணம் பயணிகள் விடுதியில் நடைபெறும்.

செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் பொறுப்புக்களுக்கு மட்டும் புதிய விண்ணப்பத் தாள்கள் 31-8-68-க்குள் தலைமைக் கழகத்திற்குச் சேரும் வகையில் அனுப்பி வைக்க வேண்டும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

நாகர்கோவில் பெருநகரக் கழகத் தேர்தல்

ஏற்கனவே விடுத்திருந்த அறிவிப்பினைத் தொடர்ந்து நாகர்கோவில் பெருநகரக் கழகத் தேர்தல் 4-9-68 புதன் காலை 10-மணிக்கு வடசேரி பயணிகள் விடுதியில் நடைபெறும்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நாளுக்குப் பிறகு அனுப்பி வைத்துள்ள எந்த ஒரு விண்ணப்பத் தாள்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

எஸ். எஸ். ஆர். கலை நிகழ்ச்சி

தழுதாழை துவக்கப் பள்ளிக் கட்டிட நிதிக்காக 29—8—68 மாலை 6-மணிக்கு அரும்பாவூர் தேவராஜா திரையரங்கில், து. ப. அழகமுத்து எம்.எல்.ஏ. தலைமையிலும்—திரு. ஜே. எஸ். இராசு எம்.எல்.ஏ, திரு. ஆர். மன்னாதி உடையார் ஆகியோர் முன்னிலையிலும் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினரின் 'கண்ணகி' (வில்லுப் பாட்டு) கலை நிகழ்ச்சி நடைபெறும்.

நீலகிரி மாவட்டக் கழகத் தேர்தல்

நீலகிரி மாவட்ட தி. மு. கழகத் தேர்தல் 31—8—68 சனிக்கிழமை காலை 10-மணிக்கு உதகை நகர தி. மு. கழகக் கட்டிடத்தில் நடைபெறும்; தேர்தல் ஆணையாளர் : தோழர் வை. இரத்தினவேலு பி.ஏ.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)